காரைக்குடியில் அண்ணா தமிழ்க் கழக பொன்விழா!

# மொழி - இனம் காத்திடவே பேரறிஞர் அண்ணா கழகத்தை உருவாக்கினார்!

## அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேச்சு!

சிவகங்கை, அக்.30-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அண்ணா தமிழ் கழகத்தின் ஐம்பதாம் ஆண்டு பொன்விழா பி.எல்.பி பேலஸில் கூட்டுறவுத் துறை அமைச்சரும், சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளருமான கே ஆர். பெரிய கருப்பன் தலைமையில் நடைபெற்றது. அண்ணா தமிழ்க் கழகத்தின் தலைவர் வி.பொன்துரை வரவேற்புப் பேசினார். புலவர் ஆறு.மெ. மெய்யாண்டவர் அண்ணா வாழ்த்து பாடினார்.

அண்ணா தமிழ்க் கழகத்தின் ஆண்டு அறிக்கையினை அண்ணா தமிழ் கழக செயலாளர் அ.கதிர்வேல் வாசித்தார். பொன்விழா மலரினை சட்டத் துறை அமைச்சர் எஸ். ரகுபதி வெளியிட கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில் கழக தணிக்கை குழு உறுப்பினரும் வழக்கறிஞருமான வி .காசிநாதனுக்கு பேரறிஞர் அண்ணா விருதினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வழங்கி சிறப்புரையாற்றினார்.

இந்த பொன்விழா நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் கே.ஆர்.ராமசாமி சுப.துரைராஜ் , காரைக்குடி மேயர் எஸ். முத்துதுரை, துணை



மேயர் நா.குணசேகரன் தொழிலதிபர் படிக்காசு, மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ,ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் கே.வேங்கடபதி அண்ணாவின் 'செந்நாவும் பேனாவும்' என்ற தலைப்பிலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் 'அண்ணாவும் கலைஞரும்' கண்ட சமூக நீதி என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார்கள். அண்ணா தமிழ்க் கழகத்தின் துணைத் தலைவர் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் நன்றி கூறினார். அண்ணா தமிழ்க் கழக இணைச் செயலாளர் பா. கணேசன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவு அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-

நாங்கள் எல்லாம் பேரறிஞர் அண்ணாவை நேரில் சந்தித்து பேச பழக முடியவில்லை. அண்ணாவின் புகழ் பாடும் இந்த அண்ணா தமிழ்க் கழகத்தின் வாயிலாக நாங்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இருப்பவர்களை தான் புகழ் பாடுவது வழக்கம். இறந்து போன வர்களைப் பற்றி புகழ் பாடுவது மிகவும் குறைவு.

ஆனால் பேரறிஞர் அண்ணாவின் புகழினை கடந்த 50 ஆண்டுகளாக காரைக்குடியில் இந்த அண்ணா தமிழ்க் கழகம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அத்தகைய முயற்சிகளுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த அண்ணா தமிழ்க் கழக நிகழ்ச்சிகளுக்கு மூன்று முறை தலைவர் கலைஞர் அவர்கள் வந்துள்ளார். 42 ஆண்டுகளாக நீர்வளத்துறை அமைச்சர் கழக பொதுச்செயலாளர் துரை முருகன் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார். இதன் மூலம் இந்த கழகத்தினை தலைவர் கலைஞர் அவர்களும் அமைச்சர் துரை முருகன் ஆகியோர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பது இங்குள்ள அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மொழி, தமிழ் இனம் ஆகியவற்றை பாது காப்பதற்காக பேரறிஞர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார். பேரறிஞர் அண்ணா மிகவும் எளிமையானவர். பகட்டான அரசியல்வாதி கிடையாது. பேரறிஞர் அண்ணா தி.மு.க.வுக்கு என்று கொள்கையினை வெளியிட்டார்.

அந்த கொள்கை வழியில் தலைவர் கலைஞர் கழக தலைவர் தளபதி அவர்கள் இன்று வரை கொள்கை மாறாமல் கட்சியினை இயக்கத்தை நடத்தி வருகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவான கழகம் ஒடுக்கப் பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஏழை, எளிய மக்களின் பாதுகாப்பாக விளங்கி வருகிறது. இத்தகைய கொள்கைவட்டத்தினை உருவாக்கியவர் பேரறிஞர் அண்ணா ஆவார். அண்ணா பெயரில் உள்ள தமிழ் கழகம் காரைக்குடியில் 50 ஆண்டுகளாக மக்கள் பணியும் தமிழ் பணியும் ஆற்றி வருகிறது.இன்று கட்சியை துவங்கும் முன் கொடியினை வெளியிடுகிறார்கள்.

கொள்கை என்ன என்பது தெரியவில்லை.பேரறிஞர் அண்ணா மக்கள் பணி தான் முக்கியம் என்று கழகத்தை உருவாக்கினார். கொள்கைபிரகடனப்படுத்தினார்.அண்ணா. பெயரைக் கொண்ட காரைக்குடி தமிழ் கழகம் . தொடர்ந்து 100 ஆண்டுகளை கடந்து செயல்பட வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி.பாலா, ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னத்துரை கே ஆர் .ஆனந்த், லெ.மூ.ரவிச்சந்திரன், நா.நெடுஞ்செழியன், நாகனிரவி, திருமலைமுத்து ராமலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ்.ரவி, மாவட்டகலை பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் காரை சுரேஷ்,மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.ஏ. ஸ்டாலின்,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ்.நாராயணன், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சீ.ரவி,

பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலராணிநாராயணன், மாமன்ற உறுப்பினர் சொ. கண்ணன் கவிஞர் ஜெயங்கொண்டான், மாவட்ட பிரதிநிதி சேவியர் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார். ராம. அன்பழகன், சண்முகம், இலக்கிய அணி அழகையா சுப.முத்துராமலிங்கம், உட்பட கழக நிர்வாகிகள் தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள். தொடர்ந்து பேச்சுப் போட்டியில் முதல் இடம் பெற்ற மாணவ-மாணவிகளுக்கு சான்றிதழ்களை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கி பாராட்டினார்.

# தொ.மு.ச. பேரவை நிர்வாகக் குழுக் கூட்டம்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நிர்வாகக் குழுக் கூட்டம் 09.11.2024 மற்றும் 10.11.2024 ஆகிய நாட்களில் காலை 10.00 மணி அளவில் “கலைஞரகம்” எண்.25, தியாகராயா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை 17 எனும் முகவரியில் உள்ள தொ.மு.ச. பேரவை அலுவலகத்தில் பேரவைத் தலைவர் கி.நடராசன் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் புதியதாக நியமிக்கப்பட்ட பேரவை நிர்வாகிகள்அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்:பேரவைப் பொதுச்செயலாளரின் விளக்கவுரை, பேரவை நடவடிக்கைகள், கூட்டத் தலைவரால் அனுமதிக்கப்படும் இதர பிரச்சினைகள்.

**இடம் : கலைஞரகம்**

**மு.சண்முகம் எம்.பி.**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை



தூத்துக்குடி வடக்கு மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலைஞர் அரங்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் தி.மு.க. மாநில இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் நவம்பர் 27-ல் கொண்டாடுவது குறித்து, வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் சிறப்பு முகாம்கள் குறித்து, கழக வளர்ச்சி பணிகள் குறித்து சிறப்பாக உரையாற்றினார் கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் ஜி.செல்வராஜ் தலைமை தாங்கினார்.உடன் தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநில மீனவர் துணைச் செயலாளர் துறைமுகம் புளோரன்ஸ்,ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியன், புதூர்ராதாகிருஷ்ணன், பீக்கிளிப்பட்டி முருகேசன், கி.ராதாகிருஷ்ணன், நவநீதகண்ணன்,காசிவிஸ்வநாதன்,சின்னமாரிமுத்து, கயத்தாறு கருப்பசாமி,புதூர் கிழக்கு செல்வராஜ்,புதூர் மேற்கு மும்மூர்த்தி,ராமசுப்பு, விளாத்திகுளம் அன்புராஜன், கோவில்பட்டி நகரச் செயலாளர் கருணாநிதி,கோவில்பட்டி ஒன்றிய சேர்மன் கஸ்தூரி தங்கராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம், கம்பம் நகராட்சி 1வது வார்டில் அமைந்துள்ள அங்கன்வாடி மையத்தில் பயிலும் மழலை செல்வங்களுக்கு கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் 1வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் பார்த்திபன் மற்றும் அங்கன்வாடி ஆசிரியர்கள் முன்னிலையில் மழலை மாணவர்களுக்கு புதிய சீருடைகளை வழங்கினார். உடன் அங்கன்வாடி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# இளைஞரணியை வார்த்தெடுக்கும் இளந்தலைவர்!



தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு ஆகச்சிறந்த அற்புதமான இளம் தலைவர் ஒருவர் கிடைத்து விட்டார்...!

தரையில் இறங்கி நடந்து... மக்களோடு மக்களாக தினம் தினம் பயணிப்பவர்.

அவரிடம் அவர் சாந்திருக்கும் இயக்கத்தின் தலைவர் ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைக்கின்றார். நம் இயக்கத்திற்கு தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் பேச்சாளர்கள் ஒரு நூறு பேரை தட்டித் தட்டிப் பார்த்து தேர்ந்தெடுத்து.... பார்த்துப் பார்த்துப் பட்டை தீட்டி... வெறும் பேச்சாளர்களாக மட்டுமல்லாது, உரை வீச்சாளர்களாக கழகத்திற்கு உங்கள் அணியின் சார்பாக வழங்கிட வேண்டுமென்று கட்டளையிடுகின்றார்..!

நாம் மேலே சொன்ன நம் இளம் தலைவர் அவர்களோ, உடனடியாக களத்தில் இறங்குகிறார். தங்கள் அணியின் துணைச் செயலாளர்கள் மற்றும் தங்கள் அணி தலைமை நிலையத்தின் முக்கிய நிர்வாகிகள், அறிவு ஜீவிகள் மற்றும் அனுபவசாலிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்.

பக்காவான திட்டமிடல் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிறது. அது மேலும் மேலும் மெருகேற்றப்பட்டு, மிகத் தெளிவான ஒரு திட்டம் தயாரிக்கப்படுகிறது.

கழகத்தில் ஏற்கனவே பயணிக்கும், அதி தீவிர கொள்கைப் பற்றும், சித்தாந்த தெளிவும், இயக்க வரலாறும் முழுமையாகத் தெரிந்த... கொஞ்சம் இளமையும், கொஞ்சம் முதுமையின் அனுபவமும் கொண்ட சற்றேறக்குறைய நாற்பது பேர் கொண்டவர்கள் அணியின் தலைமையகத்திற்கு அழைக்கப்படுகின்றார்கள்.

அவர்கள் வருவதற்கு முன்பாகவே, அணியின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் இளம் பேச்சாளர்களை உருவாக்கும் திட்டம் பற்றிய விழிப்புணர்வு அறிவிப்புகள் நேரடியாக அணியின் அந்தந்த மாவட்டச் செயல்வீரர்களால் நேரடியாகச் சென்று மாணவ-மாணவிகளிடம் தெரிவிக்கப்பட்டு.... அவர்களும் ஆன் லைன் மூலமாக விண்ணப்பிக்க துவங்குகின்றனர்..!

அந்த நாற்பது பேர் நடுவர் குழு அணியின் தலைமையகத்தில் அமர்ந்திருக்கும் போது.... இளம் தலைவர் அறிவிக்கின்றார்... இதுவரை 17,500 இளைஞர்கள் இந்தப் பேச்சாளர்கள் தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார்கள். இந்த ஆண்டு இதோடு நிறுத்திக் கொள்வோம்... இவர்களில் இருந்து ஆகச் சிறந்த நூறு பேரை நாம் தேர்வு செய்து கழக தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்து...

அதை எப்படி படிப்படியாக நாம் செயல்படுத்தி நிறைவேற்றிட வேண்டும் என்பதையும்... எந்தெந்த அடைப்படையில் பேச்சாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையெல்லாம் இருபத்தைந்து நிமிட விளக்கவுரையில் மிக ஆழமாக தெளிவுபடுத்துகின்றார்.

அதற்கு அடுத்த இரண்டு வாரங்களில் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் என்று மொத்தம் நான்கே நாட்களில், இந்த பதினேழாயிரத்தி ஐநூறு பேரையும் மாவட்டவாரியாக பிரித்து அவர்களை அந்தந்த மாவட்ட தலைநகரங்களுக்கு பெற்றோருடன் அந்தந்த மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்களே அழைத்து வந்து அங்கே நம்ம நடுவர் டீம் போய் ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக 25 சிறந்த இளம் பேச்சாளர்களை தேர்ந்தெடுத்து... அடுத்த கட்டமாக மண்டல அளவிலான பேச்சுப் போட்டிகளுக்கு அவர்களை அனுப்ப வேண்டும் என்பது தான் இளம் தலைவரின் திட்டம்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
அமைப்பாளர்
மயிலாடுதுறை மாவட்ட
சுற்றுச்சூழல் அணி

ஆனால் கூட்டம் அதிகமாக இருப்பதால் மொத்தமே நான்கு நாட்கள் மட்டுமே இதை நடத்திட வேண்டும் என்பதால் இந்த நடுவர் குழுவோடு தலைமைக் கழகத்தின் ஆகச் சிறந்த பேச்சாளர்கள் மற்றும் கொள்கை பிடிப்புள்ள பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களில் ஒரு நாற்பது பேர் இந்தக் குழுவோடு சேர்க்கப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும்.... ஒவ்வொரு வாரமும் இரண்டு வீக் எண்ட் நாட்கள் என்று இரண்டு வாரத்தில் மொத்தம் நான்கே நாட்களில் 913 (தொள்ளாயிரத்தி பதின்மூன்று) இளம் பேச்சாளர்கள் மாவட்ட நிலையில் இருந்து மண்டல நிலையிலான பேச்சாளர்கள் தேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் !

யோசித்துப் பாருங்கள் நேயர்களே வெறும் நான்கே நாட்களில் பதினேழாயிரத்தி ஐநூறு இளைஞர்களில் இருந்து 913 இளைஞர்களை மட்டும் ஒவ்வொருவரையும் மூன்றிலிருந்து நான்கு நிமிடங்கள் மட்டுமே பேச வேண்டும் என்ற அறிவுறுத்தலோடு பேச வைத்து, தேர்ந்தெடுப்பது என்பது ஒரு சாதாரண செயலா என்ன ?! எவ்வளவு பெரிய நேர்த்தியுடனும், ராணுவ கட்டுப்பாட்டுடனும் இந்த திட்டத்தில் ஈடுபட்ட அத்தனை பேரும் தங்களை உண்மையான விருப்பத்துடனும் ஆவலுடனும் ஈடுபடுத்திக்கொண்டிருக்க வேண்டும் என்பதை உங்கள் யோசனைக்கே விட்டுவிடுகின்றேன்..!

தலைமை நிலையத்திலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள் என்பதை பிரித்தெடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள போட்டியாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மூன்று பேர் கொண்ட ஒரு நடுவர் டீம் எத்தனை தேவைப்படும் என்பதை கணக்கிட்டு அதற்கேற்றாற் போல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான நடுவர்களை நியமித்து அதை அந்த அணியின் மற்றும் இளம் தலைவரின் அனைத்து சமூக ஊடக பக்கங்களிலும் அறிவித்து கழகத்தின் அதிகாரப்பூர்வ ஏடான முரசொலியிலும் வெளியிட்டு அதற்கு முன்னதாக ஒவ்வொரு நடுவரிடம் தொடர்பு கொண்டு, உங்களுக்கு இந்த தேதியில் இந்த ஊருக்குச் சென்று கடமையாற்ற தோதுப்படுமா என்பதையும் உறுதி செய்து கொண்டு பிறகு அவர்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் மற்றும் தங்குமிடம், உணவு போன்றவைகளுக்கு அந்த மாவட்டத்தில் உள்ள அணி நிர்வாகிகள் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்து விட்டு அதை அவர்கள் சரியாகச் செய்கின்றார்களா என்று தலைமை நிலையத்திலிருந்து அடிக்கடி கேட்டு உறுதி செய்து கொண்டு இதன் ஊடாகவே. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அணித் தலைமையின் சார்பாக ஒரு துணைச் செயலாளரையும் அதே அறிவிப்போடு ஒருங்கிணைப்பாளராக வெளியிட்டு அந்த ஒருங்கிணைப்புச் செயலாளர் அந்தந்த மாவட்டங்களின் மாவட்ட அணி அமைப்பாளர்கள் மற்றும் தலைமைக் கழகத்தின் மாவட்ட செயலாளர்களோடு தொடர்புகொண்டு போட்டி நடைபெறும் இடத்தை பார்வையிட்டு அதில் பங்கேற்கும் அனைவருக்கும், அவர்தம் பெற்றோருக்கும் கூட தேவைப்பட்டால் காலை சிற்றுண்டி மற்றும் கட்டாயமாக மதிய உணவுக்கும் ஏற்பாடு செய்து ஒவ்வொரு பேச்சாளரையும் மூன்று பேர் கொண்ட ஒரு நடுவர் டீம் தேர்ந்தெடுக்கும் என்று சொன்னோமல்லவா அந்த மூன்று பேரும் தனித்தனியாக தங்களுக்கு வழங்கப்படும் படிவத்தில் அந்த பேச்சாளருக்கு மூன்று தகுதிகள் அடிப்படையில் தனித்தனியாக மதிப்பெண்கள் அளித்து அப்படியாக ஒவ்வொரு டீமும் ஒரு நாளில் ஐம்பதிலிருந்து எழுபத்தைந்து பேச்சாளர்களை மட்டும் பேச வைத்து தேர்ந்தெடுத்து அன்று மாலையே, ஒவ்வொரு பேச்சாளருக்கும் மூன்று நடுவர்களும் தனித்தனியே அளித்த மதிப்பெண்களைக் கூட்டி சராசரி எடுத்து ஒவ்வொரு மாவட்டத்திலும் சராசரியாக டாப் 25 பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர்!

அந்த மாவட்டத்தில் 400 இளைஞர்கள் போட்டியில் பங்கேற்றால்... அவர்கள் அனைவருக்குமே, ஒரு நல்ல புத்தகம் மற்றும் இளம் தலைவர் கையெழுத்திட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு அதில் சில மாவட்டங்களில் மட்டும், அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் பங்கேற்ற அனைவருக்கும் இந்த சான்றிதழோடு தங்கள் சொந்த செலவில் ரூபாய் ஆயிரம் வழங்கியும் மண்டல அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 20லிருந்து 30 இளைஞர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் தலா பத்தாயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது தான் இந்த செயல் திட்டத்தின் உச்சம் !

இப்படியாக இரண்டு வாரத்தில் நான்கே நாட்களில் 913 பேர் பத்தாயிரம் ரூபாய் பரிசுப் பணத்தோடு மண்டல அளவிலான போட்டிக்கு தயார் நிலையில் இருக்க அவர்களுக்கு மண்டல போட்டியில் பேசுவதற்கு ஐந்து தலைப்புக்கள் கொடுக்கப்பட்டு அதில் மூன்றை அவர்கள் தேர்வு செய்து, உரையை தயார் செய்து கொள்ள வேண்டும் என்றும்... மண்டல தேர்வில் அமரும் நடுவர்கள், அந்த பேச்சாளர்கள் தயார்நிலையில் வந்திருக்கும் மூன்று தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை பேசச் சொன்னால், அதை ஐந்து நிமிடங்களில் பேச வேண்டும். இது தான் விதிமுறை!

இதன் நடுவே ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்ற பேச்சுப் போட்டிகளை இயக்கத்தின் அதிகாரப்பூர்வ செய்தி ஊடகமான கலைஞர் செய்திகள் அப்படியே பதிவு செய்து அதை எடிட் செய்து ஒவ்வொரு வாரமும் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை ஒரு மணி நேரம் ஒளிபரப்புச் செய்து அதை பொது மக்கள், கழக உறுப்பினர்கள் மட்டுமல்லாது கழகத் தலைவரும், இளம் தலைவரும் கூட உன்னிப்பாக கவனித்து அதன் பிறகு இளம் தலைவர் தன் அணியினருக்கு கட்டளையிடுகின்றார். இந்த 913 இளைஞர்களும் மண்டல அளவிலான போட்டிக்கு செல்வதற்கு முன்பாக பூமியிலிருந்து வெட்டி எடுத்த வைரக்கல்லாக இருக்கும் இவர்களை நாம் பட்டை தீட்டி ஜொலிக்கும் வைரங்களாக தேர்வுக்கு அனுப்ப வேண்டும். அதில் ஆகச் சிறந்த ஜொலிப்புள்ள வைரங்களை நடுவர்கள் தேர்ந்தெடுக்கட்டும் என்று !

உடனடியாக அவருடைய தலைமை நிலைய டீம், வெகு வேகமாக களமிறங்குகிறது. மண்டல போட்டிகளை இரண்டு வாரங்கள் தள்ளி வைத்து விட்டு இடைப்பட்ட காலத்தில் தமிழ்நாட்டை எட்டு மண்டலங்களாக வகைப்படுத்தி, அதில் அந்த 913 பேரையும் சராசரியாக 120 பேர் என்று பிரித்து அவர்களையும் அவர்கள் பெற்றோருடன், அந்தந்த மண்டலங்களைச் சேர்ந்த அணி நிர்வாகிகள் தங்கள் சொந்த செலவில் வாகன வசதி செய்து கொண்டு வந்து அவர்கள் அனைவருக்கும் காலை மற்றும் மதிய உணவுகளுக்கும் ஏற்பாடு செய்து ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஐந்து நடுவர்கள் அல்ல அல்ல ஐந்து பயிற்சியாளர்களாக ஆக மொத்தம் நாற்பது பேர்களை நியமித்து அதற்கான தேதி, கால அட்டவணைகளை வெளியிட்டு. அந்த ஐந்து பேரும், ஒவ்வொரு தலைப்புகளில் எப்படி பேச வேண்டும் என்று 120 பேருக்கும் பொதுவாக பேசிக் காட்டி விட்டு பிறகு ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் சராசரியாக 25 போட்டியாளர்களை பிரித்துக் கொடுத்து அவர்கள் அனைவருக்கும் தனித்தனி அறைகளில் பயிற்சி கொடுக்கப்பட்டு அத்தோடு நின்று விடாமல், அடுத்து நடக்கவிருந்த மண்டல அளவிலான போட்டி நாள் வரையிலும் ஒவ்வொரு பயிற்சியாளரும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அந்த பேச்சாளர்களோடு ஜூம் மீட்டிங் மற்றும் குரூப் சேட் மற்றும் தனித்தனி ஃபோன் உரையாடல்கள் மூலமும் பேசுவதற்கான பயிற்சிகள் ஒவ்வொரு தலைப்பிற்குமான கண்டெண்ட்டுகள் என்று அவர்களுக்கு தேவைப்படும் அத்தனை விவரங்களும் வழங்கப்பட, இந்த 913 பேரும் முழுமையான தகுதிபெற்றவர்களாக மாற்றப்பட்ட நிலையில் தான் அவர்கள் மண்டல போட்டிக்கு அழைத்துவரப்பட்டு... அவர்களில் இருந்து 24 பேர் கொண்ட நடுவர் குழுவால் சுமார் 182 இளைஞர்கள் ஆகச் சிறந்த பேச்சாளர்களாக வடிகட்டப்பட்டு அவர்கள் அனைவரும் கடந்த வெள்ளிக்கிழமை அவர்களின் ஒரு பெற்றோருடன் சென்னைக்கு அணி நிர்வாகிகளால் அழைத்து வரப்பட்டு தரமான, பாதுகாப்பான அறைகளில் தங்க வைக்கப்பட்டு சனிக்கிழமை இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு ஐந்து நடுவர்கள் கொண்ட ஒரு குழுவால், ஒவ்வொரு பிரிவிலும் டாப் 3 எனப்படும் மூன்று பேச்சாளர்கள் தேர்வு செய்யப்பட்டு ஆக மொத்தம் இரண்டு பிரிவிலும் 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்த ஆறு பேர் உரை வீச்சுக்களையும் இளம் தலைவர் உள்ளிட்ட ஒரு சிறப்புக்குழுவினர் பார்த்து, கேட்டு அந்த ஆறு பேரிலிருந்து மூன்று ஆகச் சிறந்த இளம் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்!

தலைவர் 100 இளம் பேச்சாளர்கள் தான் கேட்டார்... ஆனால் தட்டித் தட்டி தேர்ந்தெடுக்கப்பட்டதோ 182 பேர். இதில் யாரை எடுப்பது? யாரை விடுவது? என்று நடுவர்களால் முடிவு செய்ய இயலவில்லை. அனைவரிடமும் அவ்வளவும் தரம் !

விஷயம், இளம் தலைவரிடம் செல்கிறது. அவர் ரொம்ப கூலாக சொல்லிவிட்டார் தலைமை எட்டடி பாயச் சொன்னது, நாம் பதினாறு அடியாக பாய்ந்து விடுவோமே?!

அந்த 182 இளைஞர்களையுமே, இயக்கத்திற்கான இளைஞரணியின் கொடையாக நாம் கொடுத்து விடுவோம் என்று அறிவிக்கின்றார்!

இதோ அந்த 182 பேருமே டாப் 3 வெற்றியாளர்களுடன் அடுத்த நாள் அதாவது 27 அக்டோபர் அன்று காலை கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் வைத்து கழக இளைஞரணிச் செயலாளரும் தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களால்... கழக தலைவர் திராவிட மாடல் அரசின் நாயகர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டார்கள்...!

அந்த மேடையிலேயே கழகத் தலைவர் அத்தனை மாவட்டச் செயலாளர்களுக்கும் ஒரு அன்புக் கட்டளையை விடுக்கின்றார் இந்த 182 பேரும் கழகத்தின் எதிர்காலம். இவர்கள் அனைவரையும், உங்கள் மாவட்டங்களில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பேசுவதற்கு முழுமையாக வாய்ப்பளிக்க வேண்டும் என்று!

அத்தனை பேரின் புகைப்படம் உள்ளிட்ட விலாசம் மற்றும் தொடர்பு எண்களோடு கூடிய சிறு புத்தகமும் தலைவரிடம் இளம் தலைவர் அவர்களால் வழங்கப்பட அது அப்படியே மாவட்டச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்டு விட்டது. ஏற்கனவே இவருக்கு கொடுக்கப்பட்ட 30 லட்சம் உறுப்பினர் சேர்ப்பு உள்ளிட்ட பல்வேறு கட்டளைகளை சர்வ சாதாரணமாக நிகழ்த்திக் காட்டிய காரணத்தால் இளம் பேச்சாளர்களை கழகத்திற்கு உருவாக்கும் பணியை கழக இளைஞரணிச் செயலாளரிடம் கழக தலைவர் அளித்தார்!

அதை தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் தலைவர் முழுமையான உணர்வுடன் நேர்த்தியாக செய்து முடித்துள்ளார்!

182 உணர்வு மிக்க கொள்கை பிடிப்புக் கொண்ட இளைஞர்கள்.... இன்னும் ஆறே மாதத்தில் ஆளுக்கு ஆயிரம் என்று ஒரு லட்சத்தி எண்பத்தி இரண்டாயிரம் கொள்கைப் பிடிப்புள்ள, உணர்வு மிக்க இளைஞர்களை தமிழ்நாடு முழுவதும் உருவாக்குவார்கள்.

இவர்கள் தான் ஃபாஸிஸத்திற்கு எதிராக விஷம் வைத்த பாயாசத்தை வைக்கப் போகின்றவர்கள்...!

வாழ்த்துகள்... தமிழ்நாட்டின் ஆகச் சிறந்த இளம் தலைவரே...